இலவசக்கருத்தரங்கு

ஆசிரியர் ~ ச.மயூரி NDT(primary)

01. பின்வரும் பாடலை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா! – பின்னர்ச்
செம்பொற் குடம்போல தோன்றுதம்மா!
என்ன அதிசயம் பாராயம்மா! - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா!

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா! – உடல்
வட்டந் திருத்தி வருகுதம்மா!
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா! – கண்ணிற்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா!

1. பாடலில் மீனனம் எனக் குறிப்பிடுவது எது ?
   .....
2. பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள அடுக்குமொழிச் சொற்கள் எவை ?
   .....
3. சந்திரனை வெள்ளி ஓடமாகக் கூறி, ஆகாயத்தை எதுவாகக் குறிப்பிடுகிறார்?
   .....
4. பாடலில் இடம்பெறும் உவமைத் தொடர் யாது?
   .....
5. பாடலில் இடம்பெறும் பெண்பால் பெயர்ச்சொல் யாது?
   .....
6. ஒத்த சொற்களை எழுதுக.
   அ. தாமரை - ..... ஆ. மனம் - .....
   இ. ஆகாயம் - ..... ஈ. புதுமை - .....

LEARN EASY
– KNOWLEDGE IS POWER –

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி

Call: 76667 4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

02. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

மிக அதிகமான பரப்பளவில் மணல் மற்றும் மணற்குன்றுகள் நிறைந்த பகுதி பாலைவனம் எனப்படும். உலகில் மொத்த நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பாலைவனம் ஆகும். இது உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் கடினமான பகுதியாகும். இந்தப்பகுதிகளில் மணல், புழுதிப்புயல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதன் காரணமாக மணற்குன்றுகள் உருவாகின்றன.

1. மணல், மணற்குன்றுகள் நிறைந்த பகுதியை எவ்வாறு அழைப்பார்?
   .....
2. "மணற்குன்றுகள்" எனும் சொல்லைப் பிரித்தெழுதுக.
   .....
3. "குறைந்த" என்பதன் எதிர்ப்பதம் யாது?
   .....
4. பந்தியிலுள்ள இடப்பெயர் ஒன்றை எழுதுக?
   .....
5. பந்தியிலுள்ள அடைமொழிச் சொல்லொன்றை எழுதுக.
   .....
6. "அதிக தடவைகள்" எனும் கருத்தைத் தரும் சொல்லை பந்தியிலிருந்து தெரிவு செய்க.
   .....

03. பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

நாங்கள் எல்லோரும் கல்விச் சுற்றுலாவின் போது குதூகலத்துடன் பாடிக்கொண்டே சென்றோம். பேருந்து சிறிது தூரம் சென்றதும், மலைக்குன்றுகள் அங்குமிங்கும் தெரியத் தொடங்கின. "வரக்காப்பொல" என்ற இடத்தை அடைந்ததும் பெரியமலைத் தொடர்களைக் காணக்கூடியதாக இருந்தது. நாங்கள் முதலில் இறப்பர் தொழிற்சாலைக்குச் சென்றோம். அங்கே மரங்களில் இருந்து சேகரித்த வெண்ணிறமான பாலை இயந்திரங்களின் உதவியுடன் இறப்பர் தட்டுக்களாக மாற்றுவது எங்களுக்கு வியப்பாக இருந்தது.

1. பெரிய மலைத்தொடர்களை எங்கே கண்டனர் ?
   .....
2. தன்மைப் பன்மை வினைச்சொல் ஒன்றை எழுதுக ?
   .....
3. பொருட்களை உற்பத்தி செய்யும் இடத்தை அழைக்கும் தனிச் சொல்லை எழுதுக.
   .....
4. பந்தியில் குறிப்பிடப்பட்ட இணைமொழியை எழுதுக.
   .....
5. "ஆச்சரியமாக" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.
   .....
6. "வெண்ணிறம் " என்பதனைப் பிரித்தெழுதுக. .....

04. பாடலை மாத்திரம் துணையாகக் கொண்டு விடை எழுதுக.

"பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந் தாதிறைக்கும்
நன்பூதலத் தோர்க்கு நன்னிழலாம் - மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்வரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்"

1. இப் பாடலில் குறிப்பிடப்படும் மரம் ? .....
2. வில்வராய முதலியாரின் ஊர் எது ? .....
3. "விருட்சம;" என்பதன் ஒத்த கருத்தைத் தரும் சொல் யாது?
   .....
4. பாடலில் இடம்பெறும் விசிறியும் சுழியும் கொண்ட சொல் யாது?
   .....
5. இகழ் என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ?
   .....
6. மடக்கேறும் அரவும் இடம்பெறும் பெயர்ச்சொல் யாது?
   .....
7. பாடலில் இடம்பெறும் நிறுத்தற்குறியீடு யாது? .....

05. பின்வரும் பந்தியை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய பொருதடதமான விடைகளை தருக.

முற்றி விளைந்த நெற்கதிர்கள் மஞ்சள் துணி விரித்தாற் போல் காட்சியளித்தது. அறுவடைக்காகச் செல்லும் விவசாயிகள் அரிவாள்களுடன் ஓட்டமும் நடையுமாகச் சென்றனர். வயல்களிலே உள்ள குருவிகள் கீச் கீச் என ஒலி எழுப்பின.

1. இப் பந்தியில் நாளொன்றின் எவ்வேளை குறிப்பிடப்பட்டுள்ளது?
   .....
2. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்றினை எழுதுக.
   .....
3. இப் பந்தியில் இடம்பெற்றுள்ள உயர்திணை படர்க்கை பன்மை பெயர்ச்சொல் யாது?
   .....
4. இப் பந்தியில் இடம்பெற்றுள்ள பெயர் அடைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.
   .....
5. இங்கு மடக்கேறும் விசிறியும் இடம் பெற்றுள்ள சொல் எது?
   .....
6. இப் பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடர் ஒன்றினை எழுதுக.
   .....

06. பின்வரும் பந்தியை வாசிக்க.

காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப் பந்து போல மெதுவாக மேலெழுகிறான். கதிரவனைக் கண்ட நிலவு மகள் தன் கடமையை முடித்து நாணத்துடன் ஒளிந்து கொள்கிறாள்.
கடிகாரப் பறவைகளான சேவல்களும் கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிந்து கதிரவனை வரவேற்கின்றன. ஆலயங்களின் காண்டாமணி ஓசை காதில் கணீரென ஒலிக்க கூட்டங்கூட்டமாகப் பறந்து திரியும் பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. பந்தியில் வர்ணிக்கப்படும் காட்சி எவ்வேளைக்குரியது?
   .....
2. அடைமொழிச் சொல்லொன்றை பந்தியில் இருந்து எழுதுக.
   .....
3. உயர்திணை ஒருமைப் பெண்பால் பெயர்ச்சொல் ஒன்றைப் பந்தியில் இருந்து எழுதுக?
   .....
4. இங்கு கதிரவனை வரவேற்பவை எவை?
   .....
5. பறவைகள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக?
   .....
6. இங்கு சூழலை இனிமையாக்குவது எது?
   .....

07. பின்வரும் பந்தியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

கடும் மழை காரணமாக எங்கும் வெள்ளம், மரங்கள் சாய்ந்து விழுந்துள்ளன. வீதிகளிலும் வெள்ளம் பாய்வதனால் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. சில வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்கள் வெளியேறி பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களுக்குச் சமைத்த உணவு வழங்கப்பட்டுள்ளது.

1. "அடைக்கலம்" என்பதனைக் குறிக்கும் சொல்? .....
2. "வீதியிலும்" என்பதன் பன்மைச் சொல்லை எழுதுக. .....
3. உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்றைப் பந்தியில் இருந்து எழுதுக?
   .....
4. "கடும் மழை காரணமாக எங்கும் வெள்ளம்" இவ் வாக்கியத்திலுள்ள அடைமொழி?
   .....
5. மக்கள் எங்கே தஞ்சம் புகுந்துள்ளனர்?
   .....
6. இறந்த கால பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.
   .....